# செந்தமிழ்ச் செய்யுட் கலம்பகம்

பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார், எம். ஏ., எல்., டி.


PRINTED AND PUBLISHED

BY

THE TRICHINOPOLY CO-OPERATIVE PRINTING & PUBLISHING

SOCIETY, LIMI

TRICHIN

192



O-17.MS1,S
N22
67992

# முகவுரை.

அமிழ்தினுமினியது நம் செந்தமிழ் மொழி. இது மிகத் தொன்மையது. பிறமொழிகள் தோன்றுமுன்னே தோன்றியது. புலஞ்செறி இலக்கணங்களும், நலந்தரு இலக்கியங்களும் வாய்ந்தது. பொருட்பொலிவும், சொல்லமைதியும், விழுமிய ஓசையுமுடையன இவ்வரிய நூல்கள். கற்பவர் கருத்தைக் கவருந்தகையன. ஆயுந்தொறும் ஆயுந்தொறும் இன்பம் பயப்பன.

ஈடுமெடுப்புமில்லாத இவ்வரிய நூல்கள் நம் மாணவர்களுக்கு எளிதில் எட்டுவதில்லை. இக்காலத்தில் அறத்தை யுணர்த்தும் சில நூல்களையே. நம் இளைஞர் பள்ளிகளில் பயின்றுவருவதால், அவர்கள் தமிழ்ச் செய்யுட்களிலுள்ள செம்பொருள்களைச் சிறிது முணராதவராகி, பிற மொழிச் செய்யுட்களையே பெரிதும் போற்றுவாராயினர்.

இவ்வாறு நிகழ்ந்துவருமாயின் நாளடைவில் தமிழ்மொழிப் பயிற்சியும், தமிழ் நூலாராய்ச்சியுங் குன்றிவிடுமென்று கூறவும் வேண்டுமோ? அவ்வாறு நேராவண்ணம் இச் 'செந்தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' என்ற இந்த நூலைத் தொகுக்கலாயிற்று.

பாக்கள் தோன்றிய காலத்தின்படியே, ஒன்றன்பின்னொன்றாய் முறையாய் அமைக்கப்பெற்றுள்ளன. இப்பாக்களில் பல மன்னர்களின் வரலாறுகளையும், நாட்டின் வளத்தைக்காட்டுங் காட்சிகளையும், தமிழ் மக்களின் அறக்கொள்கைகளையும், அவர்கள் கடவுளைப் போற்றிய முறைகளையும், பிறவற்றையுங் காணலாம்.

இந்நூலைப் பயிலுவதால் நம் மாணவர்கள் தமிழினது சீர்மையையும், தமிழ்ச் செய்யுட்களில் பொதிந்துள்ள பல சுவைகளையும் பெரிது முணர்ந்து, தாய் மொழியினிடத்து குன்றா அன்பும், தேர்ச்சியும் அடைவார்களென்று திண்ணமாய் எண்ணுகிறேன்.

பி. தி. ஸ்ரீ.

# செந்தமிழ்ச் செய்யுட் கலம்பகம்.

## I. கடவுள் வணக்கம்.

அங்கிங்கெனாதபடியெங்கும்ப்ரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்காய்
யாதினும் வல்லவொருசித்தாகியின்பமா
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்தததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவும்
கருதியஞ்சலிசெய்குவாம். 1

ஆழாழிகரையின்றிநிற்கவிலையோகொடிய
வாலமமுதாகவிலையோ
வக்கடலின்மீதுவடவனனிற்கவிலையோ
வந்தரத்தகிலகோடி
தாழாமனிலைநிற்கவில்லையோமேருவுந்
தனுவாகவளையவிலையோ
சப்தமேகங்களும்வச்ரதாரணையிற்
சஞ்சரித்திடவில்லையோ
வாழாது வாழவேயிராமனடியாற்சிலையு
மடமங்கையாகவிலையோ
மணிமந்த்ரமாதியால்வேண்டுசித்திகளுலக
மார்க்கத்தில்வைக்கவிலையோ

பாழானவென்மனங்குவியவொருதந்திரம்
பண்ணுவதுனக்கருமையோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 2

அங்கைகொடுமலர்தூவியங்கமதுபுளகிப்ப
வன்பினாலுருகிவிழிநீ
ராறாகவாராதமுத்தியினதாவேச
வாசைக்கடற்குண்மூழ்கிச்
சங்கரசுயம்புவேசம்புவேயெனவுமொழி
தழுதழுத்திடவணங்குஞ்
சன்மார்க்கநெறியிலாத்துன்மார்க்கனேனையுந்
தண்ணருள்கொடுத்தாள்வையோ
துங்கமிகுபக்குவச்சனகன்முதன்முனிவோர்க
டொழுதருகில்வீற்றிருப்பச்
சொல்லரியநெறியையொருசொல்லாலுணர்த்தியே
சொரூபானுபூதிகாட்டிச்
செங்கமலபீடமேற்கல்லாலடிக்குள்வளர்
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. 3

கந்துகமதக்கரியைவசமாநடத்தலாங்
கரடிவெம்புலிவாயையுங்
கட்டலாமொருசிங்கமுதுகின்மேற்கொள்ளலாம்
கட்செவியெடுத்தாட்டலாம்
வெந்தழலினிரதம்வைத்தைந்துலோகத்தையும்
வேதித்துவிற்றுண்ணலாம்
வேறொருவர்காணாமலுலகத்துலாவலாம்
விண்ணவரையேவல்கொள்ளலாஞ்
சந்ததமுமிளமையோடிருக்கலாமற்றொரு
சரீரத்தினும்புகுதலாஞ்
சலமேனடக்கலாங்கனன்மேலிருக்கலாந்
தன்னிகரில்சித்திபெறலாஞ்

சிந்தையையடக்கியேசும்மாவிருக்கின்ற
திறமரிதுசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. 4

எனக்கெனச்செயல்வேறிலையாவுமிங்கொருநின்
றனக்கெனத்தகுமுடல்பொருளாவியுந்தந்தேன்
மனத்தகத்துளவழுக்கெலாமாற்றியெம்பிரானீ
நினைத்ததெப்படியப்படியருளதனீதம். 5

உளவறிந்தெலாநின்செயலாமெனவுணர்ந்தோர்க்
களவிலானந்தமளித்தனையறிவிலாப்புன்மைக்
களவுநாயினேற்கிவ்வணமமைத்தனைகருத்துத்
தளருந்தன்மையிங்காரொடுபுகலுவேன்றக்கோய். 6

தந்தைதாய்தமர்மகவெனுமவையெலாஞ்சகத்திற்
பந்தமாமென்றேயருமறைவாயினாற்பகர்ந்த
வெந்தைநீயெனையின்னமவ்வல்லலிலிருத்திற்
சிந்தைதான்றெளிந்தெவ்வணமுய்வணஞ்செப்பாய். 7

துய்யன்றண்ணருள்வடிவினன்பொறுமையாற்றுலங்கு
மெய்யனென்றுனையையனேயடைந்தனன்மெத்த
நொய்யனுண்ணியவறிவிலனொன்றைநூறாக்கும்
பொய்யனென்றெனைப்புறம்விடினென்செய்வேன்புகலாய். 8

எங்கெங்கேபார்த்தாலுமெவ்வுயிர்க்குமவ்வுயிரா
யங்கங்கிருப்பதுநீயன்றோபராபரமே.

எத்தாற்பிழைப்பேனோவெந்தையேநின்னருட்கே
பித்தானேன்மெத்தவுநான்பேதைபராபரமே. 10

எவ்வுயிருமென்னுயிர்போலெண்ணியிரங்கவுநின்
தெய்வவருட்கருணைசெய்யாய்ப்பராபரமே. 11

தாயுமானசுவாமிகள்.

## II. தாயான சருக்கம்.

ஏடவிழ்ந்ததார்ப்பேதையர்மணல்களிவிழைத்த
வீடழிந்திடப்பெருந்திரைநிரைசலைவெருண்டு
கூடிநின்றுநின்றரியநித்திலமணிகொண்டு
நாடிவேலையைத்தூர்த்திடுஞ்செழும்புகார்நகரம். 1

முற்றிழைமடவார்சூடிக்கழித்துவீழ்முல்லைமாலை
சுற்றியதிரையாலழிச்சுழியிடையுலவுநதோற்றம்
கற்றிரள்வரையாற்றேவாமிர்தினைக்கடைந்தபோதி
னற்றெழுந்தலையிற்றோன்றுமாவுரியென்னலாமே. 2

சிவனருட்பெறுமியற்பகைநாயனார்சிறப்பா
லவதரித்ததுமன்றியேபிள்ளைவந்தருளத்
தவமிழைத்தமாநகரமூன்றுங்குடித்தலைவர்
நவநிதிக்கெலாம்பிறப்பிடஞ்செழும்புகார்நகரம். 3

அத்திருநகரினில்வாழுமாதநகுத்தனென்னும்
பித்திகையலங்கன்மார்பன்பெருங்குடிவணிகனென்பான்
றத்தையேயனையதேவிதன்னுடன்செருச்குநாளிற்
புத்திரசெல்வம்வேண்டிப்புரிந்தனனிறைவர்பூசை. 4

(சின்னாளிலொருபுதல்விபிறந்தாள்).

அத்தனுமகட்குத்தன்பேரளித்தனனதன்பின்னாகச்
சித்திரமயிலன்னாளைத்திரிசிராமலையில்வாழ
மெய்த்தநகுத்தனென்னும்பெருங்குடிவணிகன்வேட்டான்
மத்தகக்களிற்றோன்மாணையுளகையாஞ்வரைந்ததென்ன. 5

மணிமுதலியபலவளித்துமாதுல
னிணைமலர்க்கரமெடுத்தேகுகென்றனன்
றுணைவிதன்வருத்தமுந்துயருமாற்றியே
வணிகனுந்திரிசிராமலையிலெய்தினன். 6

எய்தியங்கிருவருமியைந்தநல்லறஞ்
செய்தனரிளங்கொடி திரிசிராமலை
மெய்யரையன்பினல்வெள்ளிநாடொறுங்
கைதொழப்புகுந்தனள் கணவனைவலால். 7

இருவருமிப்படியியங்குநாளிலே
யாதருபாலனுமிறுதியாயின
னுருகியகிளைஞரிங்கோலையேவினர்
மருகனுமங்கையுங்கண்டுமாழ்கினர். 8

தீயுறுமயிலெனத்திரியுந்திண்கணை
பாயிளம்பிணையெனப்பதைக்கும்பைந்தொடித்
தாயரைநினைந்துகுந்தனித்தியோவெனு
மாயிரந்தாரையாவழுதுவிம்முமே. 9

சீரியவிரதமும்விருந்துஞ்செய்கையு
மூரியலாண்மையுமொழுகுநாளிலே
வாரியிற்கவுத்துவமணியைநேரெனக்
காரிகைவயிற்றிளங்கருப்பமுற்றதே. 10

அன்னையுமகள்செயலறியவேண்டுமென்
றுன்னினளப்பொழுதுவரிநீரயின்
மின்னுயிர்பெருமுகிறுரைவீழ்த்தன
பொன்னியுமிருகரைபுரண்டுவந்ததே. 11

ஆறதுதடையினாலன்னையேகுதன்
மாறினளாதரவதியறிந்திலள்
பேழிருடுபிறந்தகம்பெரிதுஞ்செய்திடக்
கூறரும்பொருளெலாங்கொண்டுசெல்லுமே. 12

பூளையின் சுமையெனக்குழல்பொலிந்திடப்
பாளையங்குழலிதழ்ப்பவளச்சேடியர்
தோளையுமணந்துவெண்டுகிலைமேற்கொடு
நாளைவந்திடுமலதின்றுநண்ணுமே. 13

எதிர்நடந்தன்னையையிறுகப்புல்லுவோங்
கதிநடந்திளைத்தசெங்கமலம்பற்றுவோ
மதிமுகவெயர்வெலாமாற்றுவோமென
வதிசயவுணர்வினாலனைத்துமெண்ணினார். 14

மின்றிகழ்மருங்குலாணிணையும்வேலையிற்
றென்றிசைவிளங்கியதேவர்நாயகன்
குன்றெனுநெடுஞ்சிலைகொண்டநாயகன்
மன்றலங்கருங்குழன்மடந்தைநாயகன் 15

சங்கரன்சிவன்சதாசிவனீசனீசானன்
புங்கவன்றிரிபுராந்தகன்புராதனன்புராணன்
கங்கைநாயகன்கறைமிடற்றிறைநுதற்கண்ண
னெங்கணாயகனிராமயன்சிராமலையிறைவன். 16

பூரணன்பரன்பராபரன்வெள்ளியம்பொருப்பன்
காரணன்மதனாந்தகன்காலனைக்கடிந்தோன்
வாரணந்தனையுரித்தவன்மறைப்பொருள்வகுத்தோ
னாரணன்றனக்கரியவன்சிராமலைநாதன். 17

முடித்தவெண்பிறைநிகரெனவளைந்திடுமுதுகி
லடுத்தவெண்ணிலாவளைந்தபோனரைக்குழலசையத்
திடத்தினாலருணடத்துவோமெனவொருசெங்கோல்
பிடித்தவாறெனவேணுதண்டங்கையிற்பிறங்க. 18

ஏடவிழ்ந்தபூங்குழலிதன்விரதநன்றெனக்கொண்
டாடுமாறெனத்திருமுகமண்டலமசையச்
சூடுகங்கையின்றிவலைபோனுதல்வெயர்துளிக்க
நீடுகொன்றைபோலொருபணிகளத்திடைநிகழ. 19

நின்றுநின்றுசென்றிளைப்புறநெடிதுழைச்செறிய
வொன்றுசெங்கையிற்கழையின்மேலுடலெலாமொடுக்கிக்
கன்றுமானையுமழுவையும்விடையையுங்கரந்து
மன்றிலாடலுமொழிந்தவளன்னைபோல்வந்தான். 20

காயபண்டமுமெண்ணெயின்கலசமுங்கனகத்
தூயமுத்தணிகலன்களும்விலையிலாத்துகிலு
மேயமங்கையரிருவர்மேற்சுமைகளாவெடுப்ப
மாயவன்றனக்கரியவனெளியனாய்வந்தான் 21

தூரவந்திடுமவளையீன்றவளெனத்துணிந்தாள்
சோரவந்திடும்பொழுதினிலெழுந்தெதிர்சென்று
பாரவந்தனைபுரிந்திருபதங்களிற்பணிந்தா
ளாரவந்திருகரங்களாற்றழுவினளன்னை. 22

மோந்துகொண்டனளுச்சியைமோந்தனள்முகத்தைக்
காந்தளுந்தொழுங்கரங்களையழுத்தினள்கண்ணிற்
பாய்ந்தகண்ணினீர்புலர்ந்திடவருண்மொழிபகர்ந்து
சாய்ந்தகொம்புநேர்மகளுடனிருந்தனடவிசில் 23

எண்ணிலாவருங்காயபண்டங்களாமெவையும்
வண்ணமேகலைப்பேழையுங்கொணர்ந்தமங்கையருக்
குண்ணுநீர்முதலளித்தநல்லடிசிலுமுதவிக்
கண்ணைநேரெனுந்தாயுடனிருந்தனள்களித்து. 24

மற்றைநாளிலேயுதரநொந்தழுங்கினமகளைப்
பெற்றதாயெடுத்தணைத்துமேற்றயிலமும்பெய்து
முற்றுமன்பினான்மருத்துவத்தொழிலெலாமுடித்தாள்
குற்றமொன்றிலாமடந்தையும்பயந்தனள்குழவி 25

குழவியீன்றவட்கருமருந்தெண்ணெயுங்கொடுத்தே
யெழுதினத்தளவிழைத்திடுஞ்செயலெலாமியற்றி
யழகுதொட்டிலுட்டுயிற்றியங்கொருமதியளவா
மழகளிற்றினைமுருகவேளெனும்படிவளர்த்தாள். 26

சிதலைசிற்றெறும்பிளஞ்சினைகிலையினுட்டேரை
பதகமானிடரிமையவரிந்திரன்பதுமன்
முதலினோர்தமைவளர்த்தருளிறையெதிர்முகமாய்
மதலையொன்றினைவளர்த்ததுபுதுமையோமறையீர். 27

மையுலாமழைக்கருமுகிற்படத்தினைமாற்றித்
துய்யவெண்முகிற்படமெனும்விதானம்வான்றூலக்கிற்
றையநுண்ணிடையாதநவதியையங்கறியப்
பையவந்தனளவளைமெய்ப்பார்கமுன்பயந்தாள். 28

மாதுலன்பெருந்தேவிதன்மனையிடைவருதல்
காதலன்பிறைற்பெருந்தநகுத்தனுங்கண்டா
னேதிலார்களிவ்விருவரில்யாவரோவென்று
ஞேதுமுன்னவள்புகுந்தனண்மடநலாளுறையுள் 29

முன்னர்வந்திருந்தருளியதாயெதிர்முகமாய்ப்
பின்னர்வந்ததாயிருந்தனளதிசயம்பிறந்த
தன்னையாவளென்றாதநவதிமருண்டனைந்தாண்
மின்னைநேரெனவிசும்பிலேமறைந்தனன்விபலன். 30

காயினுங்கடையானவராயினுநயந்தாற்
சேயினும்பரிவாகவந்தருள்செயுஞ்சிவனை
யாயிரம்பெயருடையவண்ணலையுலகனைத்துந்
தாயினல்லவனல்லவனென்றனதழைக்க. 31

சைவ எல்லப்ப நாவலர்.

---

## III. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்.

கன்னியர்க்கரசாயினாள்கடிமனைபுகுந்த
பின்னியிற்சடைமாதவர்வேதியரேனோ
ரெந்நிலத்துளமன்னவர்யாவர்க்குமுறையே
பொன்னியற்கலத்தறுசுவைப்போனகமருத்தா 1

பூசுகின்றவுமுடுப்பவும்பூண்பவும்பழுக்காய்
வாசமெல்லிலையேனவுமம்முறைவழங்காத்
தேசமன்னவரேனையோர்செல்லுநர்ச்செலுத்தி
யீசனன்புறுகற்பினாளிருக்குமவ்வேலை. 2

மடைவளத்தொழிற்புலவர்வந்தடியிணைவணங்கி
யடியரேமட்டபோனகமாயிரத்தொன்றி
னிடையதாயினுந்தொலைந்திலதியாங்கண்மேற்செய்யக்
கடவதேதெனப்பிராட்டிதன்கணவர்முன்குறுகா 3

பணிந்தொதுங்கிநின்றடிகள்முப்பத்துமுக்கோடி
கணங்கடம்மொடுமிங்கெழுந்தருள்வதுகருதி
யிணங்குமின்சுவைப்போனகமெல்லையின்றாக்கி
யுணங்குகின்றதுண்டெஞ்சியதெனைத்தெனவுரைக்கின் 4

இமையக்குன்றமுமடைகலாயிதன்புறங்கிடந்த
சிமையக்குன்றுகளிட்டமுஞ்சேர்ந்தெனநிமிரச்
சமையக்கொட்டியவாலரிப்புழுக்கலுஞ்சாதக்
கமையக்கொட்டியகறிகளின்வருக்கமுமனைத்தே. 5

என்றபோதிறையெம்பிரான்தேவியாரிடத்தி
லொன்றுமன்பினாலொருவிளையாடலைநினைந்தோ
தன்றனிக்குடைப்பாரிடத்தலைவனதாற்ற
லன்றியாவருமறிந்திடக்காட்டவோவறியேம். 6

சிறிதுவாணகைசெய்துமூவேந்தரிற்சிறந்த
மறுவின்மீனவனரும்பெறன்மகளுனக்கரிதிற்
பெறுவதேதுவான்றருவுநின்பணிசெயப்பெற்றிங்
குறைவதேற்பிறர்திருவெலாமுன்னதேயன்றோ. 7

அளவிலாதநின்செல்வத்தின்பெருக்கைநாமறிய
விளைவுசெய்தனைபோலுநின்விருந்துணப்பசியாற்
களையடைந்தவராகிநங்கணத்திலுட்காணேந்
தளவமூரலாயாஞ்செயத்தக்கதேதென்றான். 8

அடுக்கநின்றகுண்டோதரனகட்டிடைவடவை
மடுக்கவுண்ணினைதுவந்துவயிற்றெரிபசியாய்த்
தொடுக்கவாலமுண்டாங்குடல்சோர்ந்துவேர்த்தாவி
யொடுக்கமுற்றைபசியினாலுயங்கினேனென்றான். 9

குடையெடுக்குமிக்குறியதாட்குறட்கொருபிடிசோ
றிடுமினப்புறஞ்சோறுமாலெனத்தொழுதெல்லா
முடையநாயகிபோயினாள்குறியனுமுடனே
நடைதளர்ந்துகண்புகைந்திவாய்புலர்ந்திடநடந்தான். 10

படைக்கணேவலிறைமகள்பணியினாற்பசிநோய்
தொடுத்தவன்றனைக்கொண்டுபோய்ச்சொன்றிமுன்விடுத்தா
ரடுத்திருந்ததேகண்டனரன்னமாமலையை
யெடுத்தயின்றதுமடிசிலங்கிருந்ததுங்காணார். 11

மூரவைபோகியமுரிவில்வான்மூரல்பால்வறையற்
கருனைதீம்பயற்றுதுவைபல்வகைக்கறிகள்
விரவுதேம்படுபாறயிரிழுதுதேன்வெள்ளம்
வரைவிலாதனமிடாவொடுவாரிவாய்மடுத்தான். 12

பல்பழக்குவைவேற்றுருப்பண்ணியங்கன்னன்
மெல்சுவைத்தண்டுதெங்கிவையன்றியும்வேவா
வல்சிகாய்களின்வருக்கமுநுகர்ந்துமாறும
லெல்லைதீர்நவபண்டமுமெடுத்துவாய்மடுத்தான். 13

பாரித்துள்ளவிப்பண்டமும்பஆஉக்குறுங்கையால்
வாரித்தன்பெருவயிற்றிடைவைப்பவுந்துடுவை
பூரித்தாகுதிபண்ணியதழலெனப்பொங்கிக்
கோரித்தொன்பதுவாயிலும்பசித்தழல்கொளுத்த 14

அலங்கலோதிகண்டதிசயமடைந்துதன்னன்பி
னலங்கொணாயகன்முன்புபோய்நாணமுட்கிடப்ப
விலங்குபூங்குழல்சுவன்மிசையிறக்கியிட்டொல்கி
நிலங்கிளைத்துநின்றுணிலைகண்டனனிருபன். 15

அஞ்சிலோதியைவினவுவானறிகலான்போலக்
குஞ்சியாழலன்னவக்குடவயிற்றவனுண்
டெஞ்சியுள்ளவேற்பூதங்களின்னமும்விடுத்துன்
நெஞ்சுவப்பவேயருத்துதுமென்னலுநிமலை 16

ஐயவின்னுமிக்குறட்பசியடங்கிடாவேறு
வெய்யபாரிடவீரரைவிடுத்தியேலெடுத்து
வையம்யாவையும்வயிற்றிடைவைப்பரேயதனாற்
செய்யகாலருத்திரப்பெயர்தேற்றமாமுனைக்கே. 17

சங்கவார்குழைக்குறண்மகன்றன்செயருனே
யிங்குவந்துரைசெய்திடவறிதியென்றிறைமுன்
மங்கைநாயகிகுமுதவாய்மலர்பொழிதெயிற்றுத்
திங்கள்வாய்முழையான்பசித்தீச்சுடவந்தான். 18

நட்டமாடியசுந்தரநங்கையெம்பிராட்டி
யட்டபோனகம்பனிவரையனையவாய்க்கிடந்த
தொட்டுவாய்மடுத்திடவுமென்சுடுபசிதணியா
திட்டுணாதவர்வயிறுபோற்காந்துவதென்றான். 19

ஐயர்முப்புரத்திட்டதீக்கடும்பசியுருவாய்ப்
பொய்யனேன்வயிற்றிடைக்குடிப்புகுந்ததோவென்னுங்
கையெறிந்திடுமண்டங்கள்வெடிபடக்கதறு
ஐயகோவெனுமுயிர்த்திடுமாவிசோர்ந்தயரும். 20

பரஞ்சோதி முனிவர்.

---

## IV. திருவரங்கத்தின் சிறப்பு.

இல்லறமெனத்துறவறமெனச்
சொல்லறம்பிறதுணையன்றெனப்
பவக்கடலுட்டுவக்கறுப்பான்
காவிரியிடைப்பூவிரிபொழிற்
சிலமந்திகள்சினைதாவப்
பல்தெங்கின்பழக்குலையுதிர
வடர்கமுகின்மிடறொடிதரத்
தேமாங்கனிசிதறுபுவிழ
முடப்பலவின்குடக்கனியுக
வாம்பைக்கனிவாம்பிற்புக

வயன்மருங்கின்மலர்ப்பொய்கைபட்
டுயில்வலம்புரிதுண்ணனவுறத்
தாஅட்டாமரைந்தவிசுறைதரு
சூஉட்டோதிமம்பேஎட்டுடனெழ
மயிற்சேவன்மணங்களிப்பக்
குயிற்பேடைக்குலமொளிப்ப
மழைமுகிலெனமுழவதிர்தரு
திருவரங்கப்பெருநகரு
ளரவணைமிசையறிதுயிலமர்ந்
தருள்புரி
திருநாரணனைச்சேர்ந்தனஞ்
சரணாரவிந்தந்தஞ்சமென்றிரங்கே.

பிள்ளைப்பெருமாளையங்கார்.

✕

## V. மருதவாணர் மாண்பு.

கொண்டலினிருண்டகண்டத்தெண்டோட்
செவ்வானுருவிற்பையரவார்த்துச்
சிறுபிறைகிடந்தநெறிதருபுன்சடை
மூவாமுதல்வமுக்கட்செல்வ
தேவதேவதிருவிடைமருத
மாசறுசிறப்பின்வானவராடும்
பூசத்தீர்த்தம்புரக்கும்பொன்னி
யபிராவணத்துறையாடுமப்ப
கைலாயவாணகௌரிநாயக
நின்னைவணங்கிப்பொன்னடிபுகழ்ந்து
பெரும்பதம்பிழையாவரம்பலபெற்றோ
ரிமைபாநெடுங்கணுமையாணங்கையு
மழைக்கட்கடத்துப்புழைக்கைப்பிள்ளையு
மமர்த்தாங்குங்குமரவேளுநஞ்
சுரிசங்கேந்தியதிருநெடுமாலும்
வரன்முறைபடைத்தநான்முகத்தொருவனுங்

தாருகற்செற்றவீரக்கன்னியும்
நாவின்கிழத்தியும்பூவின்மடந்தையும்
பீடுயூர்தோற்றத்துக்கோடியுருத்திரரு
மாணப்பெருந்திறல்வானோர்தலைவனுஞ்
செயிர்தீர்நாற்கோட்டயிராவதமும்
வாம்பரியருக்கர்தாம்பன்னிருவரும்
சந்திரனொருவனுஞ்செந்தீக்கடவுளு
நிருதியுஞ்சமனுஞ்சுருதிகணன்கும்
வருணனும்வாயுவுமிருநிதிக்கிழவனு
மெட்டுநாகமுமட்டவசுக்களு
மூன்றுகோடியான்றமுனிவரும்
வசிட்டனுங்கபிலனுமகத்தியன்றானுந்
தும்புருநாரதரென்றிருதிறத்தரும்
வித்தகப்பாடன்முத்திறத்தடியருந்
திருந்தியவன்பிற்பெருந்துறைப்பிள்ளையு
மத்தகுசெல்வத்தவமதித்தருளிய
சித்தமார்சிவவாக்கியதேவரும்
வெள்ளைநீறுமெய்யிற்கண்டு
கள்ளன்கையிற்கட்டவிழ்ப்பித்து
மோடுய்ப்பன்னரியூளைகேட்டானைப்
பாடினனென்றுபடாம்பலவளித்துங்
குவளைப்புனவிற்றவளையரற்ற
வீசன்றன்னையேத்தினனென்று
காசும்பொன்னுங்கலந்துதூவியும்
வழிபடுமொருவன்மஞ்சனத்தியற்றிய
செழுவிதையெள்ளைத்தின்னக்கண்டு
பிடித்தலுமவனிப்பிறப்புக்கென்ன
விடித்துக்கொண்டவனெச்சிலைநுகர்ந்து
மருதவட்டத்தொருதனிக்கிடந்த
தலையைக்கண்டுதலையுறவணங்கி
யும்மைப்போலவெம்மித்தலையுங்
கிடத்தல்வேண்டுமென்றடுத்தடுத்திரந்துங்

கோயின்முற்றத்துமீமிசைக்கிடப்ப
வாய்த்தனவென்றுநாய்க்கட்டமெடுத்துங்
காம்பவிழ்த்துதிர்ந்தகனியுருக்கண்டு
வேம்புகட்கெல்லாம்விதானமமைத்தும்
விரும்பினகொடுக்கைபரம்பரற்கென்று
புரிகுழற்றேவியைப்பரிவுடன்கொடுத்த
பெரியவன்பின்வரகுணதேவரு
மிளையதன்மையரெண்ணிறந்தோர்க
ளனைவருநிற்கயானுமொருவன்
பக்தியென்பதோர்பாடுமின்றிச்
சித்தனாயினுந்தோன்றாக்கடையே
னின்னை
யிறைஞ்சிலனாயினுமேத்திலனாயினும்
வருந்திலனாயினும்வாழ்த்திலனாயினுங்
கருதியிருப்பன்கண்டாய்பெரும
நின்னுலகனைத்துநன்மைதீமை
யானவைநின்செயலாதலி
னானேயமையுநலமில்வழிக்கே.

பட்டணத்தடிகள்.

---

## VI. மாணாக்கரியல்பு.

அன்னமாவேமண்ணொடு கிளியே
இல்லிக்குடமாடெருமைநெய்யரி
அன்னார்தலையிடைகடைமாணாக்கர் 1

கோடன்மரபேகூறுங்காலைப்
பொழுதொடுசென்றுவழிபடன்முனியான்
குணத்தொடுபழகியவன்குறிப்பிற்சார்ந்
திருவெனவிருந்துசொல்லெனச்சொல்லிப்
பருகுவனன்னவார்வத்தனாகிச்
சித்திரப்பாவையினத்தகவடங்கிச்
செவிவாயாகநெஞ்சுகளனாகக்

கேட்டவைகேட்டவைவிடாதுளத்தமைத்துப்
போவெனப்போதலென்மனார்புலவர் 2

நூல்பயிலியல்பேநுவலின்வழக்கறிதல்
பாடம்போற்றல்கேட்டவைநினைத்தல்
ஆசாற்சார்ந்தவையமைவரக்கேட்டல்
அம்மாண்புடையோர்தம்மொடுபயிறல்
வினாதல்வினாயவைவிடுத்தலென்றிவை
கடனாக்கொளினேமடநனியிகக்கும். 3

ஒருகுறிகேட்போனிருகாற்கேட்பிற்
பெருகநூலிற்பிழைபாடிலனே 4

முக்காற்கேட்பின்முறையறிந்துரைக்கும் 5

ஆசானுரைத்ததமைவரக்கொளினும்
காற்கூறல்லது பற்றலனாகும். 6

அவ்வினையாளரொடுபயில்வகையொருகாற்
செவ்விதினுரைப்பவவ்விருகாலும்
மையறுபுலமைமாண்புடைத்தாகும். 7

அழலினீங்கானணுகானஞ்சி
நிழலினீங்கானிறைந்தநெஞ்சமோ
டெத்திறத்தாசானுவக்குமத்திறம்
அறத்திற்றிரியாப்படர்ச்சிவழிபாடே. 8

பவணந்திமுனிவர்

---

## VII. கோச்செங்கட் சோழநாயனார் புராணம்.

துலையிற்புறவினிறையளித்தசோழருரிமைச்சோணாட்டி
லலையிற்றரளமகிலொடுசந்தணிநீர்ப்பொன்னிமணிகொழிக்குங்
குலையிற்பெருகுஞ்சந்திரதீர்த்தத்தின்மருங்குகுளிர்சோலை
நிலையிற்பெருகுந்தருமிடைந்தநெடுந்தண்கானமொன்றுளதால். 1

அப்பூங்காவில்வெண்ணாவலதன்கீழ்முன்னாளரிதேடு
மெய்ப்பூங்கழலார்வெளிப்படலுமிக்கதவத்தோர்வெள்ளானை
கைப்பூம்புனலுமுகந்தாட்டிக்கமழ்பூங்கொத்துமணிந்திறைஞ்சி
மைப்பூங்குவளைக்களத்தாரைநாளும்வழிபட்டொழுகுமால். 2

ஆனைசெயலாற்றிருவானைக்காவென்றதற்குப்பெயராக
ஞானமுடையவொருசிலந்திநம்பர்செம்பொற்றிருமுடிமேற்
கானல்விரவுஞ்சருகுதிராவண்ணங்கலந்தவாய்நூலான்
மேனற்றிருமேற்கட்டியெனவிரிந்துசெறியப்புரிந்துளதால். 3

நன்றுமிழைத்தசிலம்பிவலைப்பரப்பைநாதனடிவணங்கச்
சென்றபானையநுசிதமென்றதனைச்சிதைக்கச்சிலம்பிதா
னின்றுகளிற்றின்கரஞ்சுலவிற்றென்றுமீளவிழைத்ததனை
யன்றுகழித்தபிற்றைநாளடல்வெள்ளானையழித்ததால். 4

எம்பிரான்றன்மேனியின்மேற்சருகுவிழாமையான்வருந்தி
யும்பரிழைத்தநூல்வலயமழிப்பதேயென்றுருத்தெழுந்து
வெம்பிச்சிலம்பிதுதிக்கையினிற்புக்குக்கடிப்பவேகத்தாற்
குய்ப்பயானைகைநிலத்தின்மோதிக்குலைந்துவீழ்ந்ததால். 5

தறையிற்புடைப்பக்கைப்புக்கசிலம்பிதானுமுயிர்நீங்க
மறையிற்பொருளுந்தருமாற்றான்மதயானைக்கும்வரங்கொடுத்து
முறையிற்சிலம்பிதனைச்சோழர்குலத்துவந்துமுன்னுதித்து
நிறையிற்புவனங்காத்தளிக்கவருள்செய்தருளநிலத்தின்கண் 6

தொன்மைதருசோழர்குலத்தரசனாஞ்சுபதேவன்
றன்னுடையபெருந்தேவிகமலவதியுடன்சார்ந்து
மன்னுபுகழ்த்திருத்தில்லைமன்றாடுமலர்ப்பாதஞ்
சென்னியுறப்பணிந்தேத்தித்திருவடிக்கீழ்வழிபடுநாள் 7

மக்கட்பேறின்மையினான்மாதேவிவரம்வேண்டச்
செக்கர்நெடுஞ்சடைக்கூத்தர்திருவுள்ளஞ்செய்தலினான்
மிக்கதிருப்பணிசெய்தசிலம்பிகுலவேந்துமகி
ழக்கமலவதிவயிற்றினணிமகவாய்வந்தடைய 8

கழையார்தோளிகமலவதிதன்பாற்கருப்பநாணிரம்பி
விழையார்மகவுபெறவடுத்தவேலையதனிற்காலமுணர்
பழையாரொருநாழிகைகழித்துப்பிறக்குமேலிப்பசுங்குழவி
யுழையார்புவனமொருமூன்றுமளிக்குமென்னவொள்ளிழையார். 9

பிறவாதொருநாழிகைகழித்தென்பிள்ளைபிறக்கும்பரிசென்கா
லுறவார்த்தெடுத்துத்தூக்குமெனவுற்றசெயன்மற்றதுமுற்றி
யறிவாணர்கள்சொல்லியகாலமணையப்பிணிவிட்டருமணியை
யிறவாதொழிவாள்பெற்றெடுத்தென்கோச்செங்கணானே
வென்றாள். 10

தேவிபுதல்வற்பெற்றிறக்கச்செங்கோற்சோழன்சுபதேவ
னாவியனையவரும்புதல்வன்றன்னைவளர்த்தங்கணிமகுட
மேவுமுரிமைமுடிகவித்துத்தானும்விரும்புபெருந்தவத்தின்
றாவினெறியைச்சென்றடைந்துதலைவர்சிவலோகஞ்சார்ந்தான். 11

கோதைவேலான்கோச்செங்கட்சோழன்றணிக்குவலயத்தி
லாதிமூர்த்தியருளான்முன்னறிந்துபிறந்துமண்ணாள்வான்
பூதநாதன்றான்மகிழ்ந்துபொருந்தும்பெருந்தண்சிவாலயங்கள்
காதலோடும்பலவெடுக்குந்தொண்டுபுரியுங்கடன்பூண்டான். 12

ஆனைக்காவிற்றான்முன்னமருள்பெற்றதனையறிந்தங்கு
மானைத்தரித்ததிருக்கரத்தார்மகிழுங்கோயில்செய்கின்றான்
ஞானச்சார்வாம்வெண்ணாவலுடனேகூடநலஞ்சிறக்கப்
பானற்களத்துத்தம்பெருமானமருங்கோயிற்பணிசமைத்தான். 13

மந்திரிகடமையேவிவள்ளல்கொடையனபாயன்
முந்தைவருங்குலமுதலோனாயமுதற்செங்கணா
னந்தமில்சீர்ச்சோணாட்டிலகணாடுதொறுமணியார்
சந்திரசேகரனமருந்தானங்கள்பலசமைத்தான். 14

அக்கோயிலெல்லாஞ்சிவனுக்கமுதுபடிமுதலான
மிக்கபெருஞ்செல்வங்கள்விருப்பினான்மிகவமைத்துத்
திக்கனைத்துந்தனிச்செங்கோன்முறைநிறுத்தித்தேர்வேந்தன்
மூக்கண்முதனடமாடுமுதற்றில்லைமுன்னினான். 15

திருவார்ந்தசெம்பொன்னினம்பலத்தேநடஞ்செய்யும்
பெருமானையடிவணங்கிப்பேரன்புதலைசிறப்ப
வருகாதலின்றுளங்களிப்பத்தொழுதேத்தியுறையுநாள்
வருவாய்மைமறையவர்க்குமாளிகைகள்பலசமைத்தான். 16

தேவர்பிரான்றிருத்தொண்டிற்கோச்செங்கட்செம்பியர்கோன்
பூவலயம்பொதுநீக்கியாண்டருளிப்புவனியின்மே
லேவியநற்றொண்டுபுரிந்திமையவர்களடிபோற்ற
மேவினான்றிருத்தில்லைவேந்தர்திருவடிநிழற்கீழ். 17

சேக்கிழார்.

---

## VIII. ஐயடிகள் காடவர்கோனாயனார்.

வையநிகழ்பல்லவர்தங்குலமரபின்வழித்தோன்றி
வெய்யகலியும்பகையுமிகையொழியும்வகையடக்கிச்
செய்யசடையார்சைவத்திருநெறியாலரசளிப்பா
ரையடிகணீதியாறடிப்படுத்துஞ்செங்கோலார். 1

திருமலியும்புகழ்விளங்கச்சேணிலத்திலெவ்வுயிரும்
பெருமையுடனினிதமரப்பிறபுலங்களடிப்படுத்துத்
தருமநெறிதழைத்தோங்கத்தாரணிமேற்சைவமுட
னருமறையின்றுறைவிளங்கவரசளிக்குமந்நாளில். 2

மன்னவரும்பணிசெய்யவடநூறென்றமிழ்முதலாம்
பன்னுகலைப்பணிசெய்யப்பாரளிப்பாரரசாட்சி
யின்னலெனவிகழ்ந்ததனையெழிற்குமரன்மேலிழிச்சி
நன்மைநெறித்திருத்தொண்டுநயந்தளிப்பாராயினார். 3

தொண்டுரிமைபுரக்கின்றார்சூழ்வேலைபுலகின்க
ணண்டர்பிரானமர்ந்தருளுமாலயங்களானவெலாங்
கண்டிறைஞ்சித்திருத்தொண்டின்கடனேற்றபணிசெய்தே
வண்டமிழின்மொழிவெண்பாவோரொன்றுவழுத்துவார். 4

பெருந்தொழுகாதலில்வணங்கிப்பெரும்பற்றத்தண்புலியூர்த்
திருச்சிற்றம்பலத்தாடல்புரிந்தருளுஞ்செய்யசடை
நிருத்தனார்திருக்கூத்துநேர்ந்திறைஞ்சிநெடுந்தகையார்
விருப்பினுடன்செந்தமிழின்வெண்பாமென்மலர்புனைந்தார். 5

அவ்வகையாலருள்பெற்றங்கமர்ந்துசிலநாள்வைகி
யிவ்வுலகிற்றம்பெருமான்கோயில்களெல்லாமெய்திச்
செவ்வியவன்பொடுபணிந்துதிருப்பணியேற்றனசெய்தே
யெவ்வுலகும்புகழ்ந்தேத்துமின்றமிழ்வெண்பாமொழிந்தார். 6

இந்நெறியாலரனடியாரின்பமுறவிசைந்தபணி
பன்னெடுநாளாற்றியபின்பரமர்திருவடிநிழற்கீழ்
மன்னுசிவலோகத்துவழியன்பர்மருங்கணைந்தார்
கன்னிமதில்சூழ்காஞ்சிக்காடவரையடிகளார். 7

சேக்கிழார்.

கழிந்ததுநென்னற்றுக்கட்டுவிட்டுநாறி
யொழிந்ததுடலிராவண்ண—மழிந்த
திராமலையாகொண்டுபோவென்றுமுன்னெஞ்சே
சிராமலையான்பாதமேசேர். 8

ஐயடிகள்காடவர்கோனாயனார்.

---

## IX கையடைப்படலம்.

நனைவருகற்பகநாட்டுநன்னகர்
அனைவருமனைதரவயிர்க்குஞ்சிந்தையான்
நினையவுமரியதுவிசும்பினீண்டதோர்
புனைமணிமண்டபம்பொலியவெய்தினான். 1

மடங்கல்போன்மொய்ம்பினான்முன்னர்மன்னுயிர்
அடங்கலுமுலகும்வேறமைத்துத்தேவரோ
டடங்கொனான்முகனையும்படைப்பனீண்டெனாத்
தொடங்கியதுனியுறுமுனிவன்தோன்றினான். 2

வந்துமுனியைத்துதலுமார்பினணிபாரம்
அந்தரதலத்திரவியஞ்சவொளிவிஞ்சக்
கந்தமலரிற்கடவுடன்வரவுகாணும்
இந்திரனெனக்கடிதெழுந்தடிபணிந்தான். 3

பணிந்துமணிசெற்றுபுகுயிற்றியவிர்பைம்பொன்
அணிந்ததவிசிட்டதினருத்தியோடிருத்தி
இணைந்தகமலச்சரணருச்சனைசெய்தின்றே
துணிந்ததன்வினைத்தொடர்பெனத்தொழுதுசொன்னான். 4

நிலஞ்செய்தவமென்றுணரினன்றுநெடியோயென்
நலஞ்செய்வினையுண்டெனினுமன்றுநகர்நீயான்
வலஞ்செய்துவணங்கவெளிவந்தவிதுமுந்தென்
குலஞ்செய்தவமென்றினிதுகூறமுனிகூறும். 5

என்னனையமுனிவருமிமையவருமிடையூறொன்றுடையரானால்
பன்னகமுநகுவெள்ளிப்பனிவரையும்பாற்கடலும்பதுமபீடத்
தன்னகருங்கற்பகநாட்டணிநகருமணிமாடயோத்தியென்னும்
பொன்னகருமல்லாதுபுகலுண்டோவிகல்கடந்தபுலவுவேலோய். 6

இன்றளிர்க்கற்பகநறுந்தேனிடைதுளிக்குநிழலிருக்கையிழந்து போந்து
நின்றளிர்க்குந்தணிக்குடைக்கீழதினொதுங்கிக்குறையிரந்துநிற்ப நோக்கிக்
குன்றளிக்குங்குலமணித்தோட்சம்பரனைக்குலத்தோடுந்தொலைத்து நீகொண்
டன்றளித்தவரசன்றோபுரந்தானின்றுள்கின்றதரசவென்றான். 7

உரைசெய்யுமளவினவன்முகநோக்கியுள்ளத்தினொருவராலும்
கரைசெய்யவரியதொருபேருவகைக்கடல்பெருகக்கரங்கள்கூப்பி
அரைசெய்தியிருந்தபயனெய்தினமற்றினிச்செய்வதருளு கென்று
முரைசெய்துகடைத்தலையான்முன்மொழியப்பின்மொழியு முனிவனுங்கே. ௮

தருவனத்துள்யானியற்றுந்தவவேள்விக்கிடையூறுத்தவஞ்
செய்வோர்கள்
வெருவரச்சென்றடைகாமவெகுளியெனநிருதரிடைவிலக்கா
வண்ணம்
செருமுகத்துக்காத்தியெனநின்சிறுவர்நால்வரினுங்கரியசெம்மல்
ஒருவனைத்தந்திடுதியெனவுயிரிரக்குங்கொடுங்கூற்றினுளையச்
சொன்னான். 9

எண்ணிலாவருந்தவத்தோனியம்பியசொன்மருமத்தினெறிவேல்
பாய்ந்த
புண்ணிலாம்பெரும்புழையிற்கனனுழைந்தாலெனச்செவியிற்
புகுதலோடும்
உண்ணிலாவியதுயரம்பிடித்துந்தவாருயிர்நின்றாசலாடக்
கண்ணிலான்பெற்றிழந்தானெனவுழந்தான்கடுந்துயரங்
காலவேலான். 10

தொடையூற்றுந்தேன்றுளிக்குநறுந்தாரானொருவண்ணந்துயர
நீங்கிப்
படையூற்றமிலன்சிறியனிவன்பெரியோய்பணியிதுவேற்பனி
நீர்க்கங்கை
புடையூற்றுஞ்சடையானுநான்முகனும்புரந்தரனும்புகுந்து
செய்யும்
இடையூற்றுக்கிடையூறுயான்காப்பன்பெருவேள்விக்கெழுக
வென்றான். 11

என்றனனென்றலுமுனிவோடெழுந்தனன் மண்படைத்த
முனியிறுதிக்காலம்
அன்றெனவாமெனவிமையோரயிர்த்தனர்மேல்வெயில்
காந்ததங்குமிங்கும்
நின்றனவுந்திரிந்தனமீநிவந்தகொழுங்கடைப்புருவநெற்றிமுற்றச்
சென்றனவந்தனநகையுஞ்சிவந்தனகண்ணிருண்டன
போய்த்திசைகளெல்லாம். 12

கறுத்தமாமுனிகருத்தையுன்னிநீ
பொறுத்தியென்றவற்புகன்றுநின்மகற்
குறுத்தலாகலாவுறுதியெய்துநாள்
மறுத்தியோவெனாவசிட்டன்கூறினான். 13

பெய்யுமாரியாற்பெருகுவெள்ளம்போய்
மொய்கொள்வேலைவாய்முடுகுமாறுபோல்
ஐயநின்மகற்களவில்விஞ்சைவந்த
தெய்துகாலமின்றெதிர்ந்ததென்னவே. 14

குருவின்வாசகங்கொண்டுகொற்றவன்
திருவின்கேள்வனைக்கொணர்மின்சென்றென
வருகவென்றனனென்றலோடும்வந்
தருகுசார்ந்தனனறிவினும்பரான். 15

வந்தநம்பியைத்தம்பிதன்னொடு
முந்தைநான்மறைமுனிக்குக்காட்டிநற்
றந்தைநீதனித்தாயுநீயிவர்க்
கெந்தைதந்தனனியைந்தசெய்கென்றான். 16

கம்பர்.

---

## X. கடிமணப்படலம்.

வானவர்பெருமானும்மனநினைவினனாகத்
தேனமர்குழலாடன்றிருமணவினைநாளைப்
பூநகுமணிவாசம்புனைநகரணிவீரென்
றானையின்மிசையானவணிமுரசறைகென்றான். 1

முரசறைதலுமானமுதியருமிளையோரும்
விரைசெறிகுழலாரும்விரவினர்விரைகின்றார்
உரைசெறிகளியோடுமுவகையினுயர்கின்றார்
கரைதெரிவரிதாகுமிரவொருகரைகண்டார். 2

தேர்மிசைவருவாருஞ்சிவிகையில்வருவாரும்
ஊர்தியில்வருவாருமொளிர்மணிநிரையோடைக்
கார்மிசைவருவாருங்கரிணியில்வருவாரும்
பார்மிசைவருவாருப்பண்டியில்வருவாரும். 3

முத்தணியணிவாருமணியணிமுனிவாரும்
பத்தியினிமிர்செம்பொற்பலகலன்மகிழ்வாரும்
தொத்துறுதொழின்மாலைசுரிகுழலணிவாரும்
சித்திரநிறைதெய்வச்செந்துகில்புனைவாரும். 4

உண்ணிறைநிமிர்செல்வமொருதுறைசெலவென்றும்
கண்ணுறலரிதென்றுங்கருதுறலரிதம்மா
எண்ணுறுசுடர்வானத்திந்திரன்முடிசூட
மண்ணுறுதிருநாளேயொத்ததமணநாளே. 5

கரைதெரிவரியதுகனகம்வேய்ந்தது
வரையெனவுயர்ந்ததுமணியிற்செய்தது
நிரைவளைமணவினைநிரப்புமண்டபம்
அரசர்தமரசனுமனுகன்மேயினான். 6

மங்கலமுரசினமழையினார்த்தன
சங்குகண்முழங்கினதாரைபொம்மெனப்
பொங்கினமறையவர்புகலுநான்மறை
கங்குலினொலிக்குமக்கடலும்போன்றவே. 7

புயலுளமின்னுளபொருவின்மீனுள
இயன்மணியினமுளசுடருமீன்றுள
மயன்முதற்றிருத்தியமணிசெய்மண்டபம்
அயன்முதற்றிருத்தியவண்டமொத்ததே. 8

எண்டவமுனிவருமிறைவர்யாவரும்
அண்டரும்பிறரும்புக்கடங்கிற்றாதலின்
மண்டபம்வையமும்வானும்வாய்மடுத்
துண்டவன்மணியணியுதரமொத்ததே. 9

மண்ணுறுசுடர்மணிவயங்கித்தோன்றிய
கண்ணுறுகருங்கடலதனைக்கைவளர்
தண்ணிறப்பாற்கடறழீஇயதாமென
வெண்ணிறப்பட்டொளிவிளங்கச்சாத்தியே. 10

நணுகவுமரியதாய்நடக்குஞானத்தார்
உணர்வினினொளிதிகழுத்தரீயந்தான்
தணிவருகலனெனக்கழுத்திற்சாத்திய
மணியுமிழ்கதிரெனமார்பிற்றோன்றவே. 11

முப்பாம்பொருளுக்குண்முதலைமூலத்தை
இப்பாரந்துடைத்தவரெய்துமின்பத்தை
அப்பனைபப்பினுளமுதைத்தன்னையே
ஒப்பனையொப்பனையுரைக்கவொண்ணுமோ 12

எஞ்சலிலுலகத்துள்ளவெறிபடையரசர்வெள்ளங்
குஞ்சரக்குழாத்திற்சுற்றக்கொற்றவனிருந்தகூடம்
வெஞ்சினத்தனுவலானுமேருமால்வரையிற்சேருஞ்
செஞ்சுடர்க்கடவுளென்னத்தேரிடைச்சென்றுசேர்ந்தான். 13

இரதமாண்டிழிந்தபின்னரிருமருங்கிரண்டுகையும்
பரதனுமிளையகோவும்பரிந்தனரேந்தப்பைந்தார்
வரதனுமெய்திமைதீர்மாதவர்த்தொழுதுநீதி
விரதமெய்த்தாதைபாதம்வணங்கிமாடிருந்தவேலை. 14

நன்றிவானவரெலாமிருந்தநம்பியைத்
துன்றிருங்கருங்கடற்றுவைப்பத்தோன்றியிம்
மன்றலங்கோதையாண்மாலைசூட்டிய
அன்றினுமின்றுடைத்தழகென்றாரரோ. 15

நீந்தருங்கடலெனநிறைந்தவேதியர்
தோய்ந்தநூன்மார்பினர்சுற்றத்தொன்னெறி
வாய்ந்தநல்வேள்விக்குவசிட்டன்மையற
ஏய்ந்தன்கலப்பைபோடினிதினெய்தினான். 16

மன்றலின்வந்துமணித்தவிசேறி
வென்றிநெடுந்தகைவீரனுமார்வத்
தின்றுணையன்னமுமெய்தியிருந்தார்
ஒன்றியபோகமும்யோகமுமொத்தார். 17

கோமகன்முன்சனகன்குளிர்நன்னீர்
பூமகளும்பொருளுமெனநீயென்
மாமகடன்னொடுமன்னுதியென்னாத்
தாமரையன்னதடக்கையினீந்தான். 18

அந்தணராசியருங்கலமன்னர்
தந்தபல்லாண்டிசைதார்முடிமன்னர்
வந்தனைவானவர்வாழ்த்தொலிபோல
முந்தியசங்கமுழங்கினமாதோ. 19

வெய்யகனற்றலைவீரனுமந்நாண்
மையறுமந்திரமும்மைவழங்கா
நெய்யமையாவுதியாவையுநேர்ந்தே
தையறளிர்க்கைதடக்கைபிடித்தான். 20

வலங்கொடுதீயைவணங்கினர்வந்து
பொலம்புரிநூலவர் செய்பொருண்முற்றி
இலங்கொளியம்மிமிதித்தெதிர்நின்று
கலங்கலில்கற்பினருந்ததிகண்டார். 21

மற்றுளசெய்வனசெய்துமகிழ்ந்தார்
முற்றியமாதவர்தாண்முறைசூடிக்
கொற்றவனைக்கழல்கும்பிடலோடும்
பொற்றொடியைக்கொடுநன்மனைபுக்கான். 22

ஆர்த்தனபேரிகளார்த்தனசங்கம்
ஆர்த்தனநான்மறையார்த்தனவானோர்
ஆர்த்தனபல்கலையார்த்தனபல்லாண்
டார்த்தனவண்டினமார்த்தனவேலை. 23

கம்பர்.

## XI. திருவாசகம்.

மெய்தானரும்பிவிதிர்விதித்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே. 1

நாடகத்தாலுன்னடியார்போனடித்துநானடுவே
வீடகத்தேபுகுந்திடுவான்மிகப்பெரிதும்விரைகின்றே
னாடகச்சீர்மணிக்குன்றேயிடையறாவன்புனக்கென்
னூடகத்தேநின்றுருகத்தந்தருளெம்முடையானே. 2

ஆடுகின்றிலைகூத்துடையான்கழற்கன்பிலையென்புருகிப்
பாடுகின்றிலைபதைப்பதுஞ்செய்கிலைபணிகிலைபாதமலர்
சூடுகின்றிலைசூட்டுகின்றதுமிலைதுணையிலிபிணநெஞ்சே
தேடுகின்றிலைதெருவுதோறலறிலைசெய்வதொன்றறியேனே. 3

தினைத்தனையுள்ளதோர்பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும்பேசுந்தோறுமெப்போது
மனைத்தெலும்புண்ணெகவானந்தத்தேன்சொரியுங்
குனிப்புடையானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. 4

கண்ணப்பனொப்பதோரன்பின்மைகண்டபி
னென்னப்பனென்னொப்பிலென்னையுமாட்கொண்டருளி
வண்ணப்பணித்தென்னைவாவென்றவான்கருணைச்
சுண்ணப்பொன்னீற்றற்கேசென்றூதாய்கோத்தும்பீ. 5

நாயேனைத்தன்னடிகள்பாடுவித்தநாயகனைப்
பேயேனதுள்ளப்பிழைபொறுக்கும்பெருமையனைச்
சீயேதுமில்லாதென்செய்பணிகள்கொண்டருளுந்
தாயானவீசற்கேசென்றூதாய்கோத்தும்பீ. 6

முத்திக்குழன்றுமுனிவர்குழாநனிவாட
வத்திக்கருளியடியேனையாண்டுகொண்டு
பத்திக்கடலுட்பதித்தபரஞ்சோதி
தித்திக்குமாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. 7

இணையார்திருவடியென்றலைமேல்வைத்தலுமே
துணையானசுற்றங்களத்தனையுந்துறந்தொழிந்தே
னணையார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
புணையாளன்சீர்பாடிப்பூவல்லிகொய்யாமோ.

தேன்பழச்சோலைபயிலுஞ்சிறுகுயிலேயிதுகேணீ
வான்பழித்திம்மண்புகுந்துமனிதரையாட்கொண்டவள்ள
லூன்பழித்துள்ளம்புகுந்தென்னுணர்வதுவாயவொருத்தன்
மான்பழித்தாண்டமென்னோக்கிமணாளனைநீவரக்கூவாய்.

கூவினபூங்குயில்கூவினகோழிகுருகளியம்பினவியம்பினசங்க
மோவினதாரகையொளியொளியுதயத்தொருப்படுகின்றது
விருப்பொடுநம
தேவநற்செறிகழற்றாளிணைகாட்டாய்திருப்பெருந்துறையுறை
சிவபெரும
யாவருமறிவரியாயெமக்கெளியாயெம்பெருமான்
பள்ளியெழுந்தருளாயே.

சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்திரண்டுதிரண்டுன்றிருவார்த்தை
விரிப்பார்கேட்பார்மெச்சுவார்வெவ்வேறிருந்துன்றிருநாமந்
தரிப்பார்பொன்னம்பலத்தாடுந்தலைவாவென்பாரவர்முன்னே
நரிப்பாய்நாயேனிருப்பேனோநம்பியினித்தானல்காயே.

பிறிவறியாவன்பர்நின்னருட்பெய்கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச்செல்வம்வந்துபெற்றாருன்னைவந்திப்பதோர்
நெறியறியேனின்னையேயறியேனின்னையேயறியு
மறிவறியேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

கல்லாதபுல்லறிவிற்கடைபட்டநாயேனை
வல்லாளனாய்வந்துவனப்பெய்தியிருக்கும்வண்ணம்
பல்லோருங்காணவென்றன்பசுபாசமறுத்தானை

அன்றேயென்றனாவியுமுடலுமுடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நனோவிதற்குநாயகமே. 14

நாயிற்கடையாநாயேனைநயந்துநீயேயாட்கொண்டாய்
மாயப்பிறவியுன்வசமேவைத்திருட்டிருக்குமதுவன்றி
யாயக்கடவேனானோதானென்னதோவிங்கதிகாரங்
காயத்திடுவாயுன்னுடையகழற்கீழ்வைப்பாய்கண்ணுதலே 15

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. 16

நெறியல்லாநெறிதன்னைநெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமேதிருவருளேசேரும்வண்ணம்
குறியொன்றுமில்லாதகூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவாறார்பெறுவாரச்சோவே. 17

மாணிக்கவாசகசுவாமிகள்.

---

## XII. தேவாரம்.

வையகமுற்றுமாமழைமறந்துவயலினீரிலைமாநிலந்தருகோ
முய்யக்கொள்கமற்றெங்களையென்னவொளிகொள்வெண்முகிலாய்ப்
பரந்தெங்கும்
பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்பன்னிருவேலி
கொண்டருளுஞ்
செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்
கூருளானே

நலமிலாதானைநல்லனேயென் றுநரைத்தமார்தரையிளையனே
குலமிலாதானைக்குலவனேயென் றுகூறினுங்கொடுப்பாரிலை
புலமெலாம்வெறிகமழும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்கா
லமாதமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே 2

கற்றிலாதானைக்கற்றுநல்லனேகாமதேவனையொக்குமே
முத்திலாதானைமுத்தனேயென் றுமொழியினுங்கொடுப்பாரிலைப்
பொத்திலார்ந்தைகள்பாட்டருப்புகலூரைப்பாடுமின்புலவீர்கா
ளத்தனையமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே 3

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன் றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரிர்வாழ்ந்துபோதிரே 4

செத்தபோதினின்முன்னின் றுநம்மைச்சிலர்கள்கூடிச்சிரிப்பதன்
முன்னம்
வைத்தசிந்தையுண்டேமனமுண்டேமதியுண்டேவிதியின்
பயனுண்டே
முத்தனெங்கள்பிரானென் றுவானோர்தொழநின்றதிமிலேறுடை
யானை
யத்தனெந்தைபிரானெம்பிரானையாரூரானைமறக்கலுமாமே 5

தெருண்டவாயிடைநூல்கொண்டுசிலந்திசித்திரப்பந்தர்சிக்கென
வியற்றச்
சுருண்டசெஞ்சடையாயதுதன்னைச்சோழனாக்கியதொடர்ச்சி
கண்டடியேன்
புரண்டுவீழ்ந்துநின்பொன்மலர்ப்பாதம்போற்றிபோற்றியென் றன்
பொடுபுலம்பி
யருண்டென்மேல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனவடுதுறையாதி
யெம்மானே 6

எங்கேபோவேனாயிடினுமங்கேவந்தென்மனத்தீராய்ச்
சங்கையொன்றுமின்றியேதலைநாள்கடைநாளொக்கவே
கங்கைசடைமேற்கரந்தானேகலைமான்மறியுங்கனன்மழுவுந்
தங்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. 7

பாரோர்விண்ணவரும்பரவிப்பணிந்தேத்தநின்ற
சீரார்மேனியனேதிகழ்நீலமிடற்றினனே
காரார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
வாராவின்னமுதேயடியேனையுமஞ்சலென்னே. 8

கற்பகத்தினைக்கனகமால்வரையைக்காமகோபனைக்கண்ணுதலானைச்
சொற்பதப்பொருளிருளறுத்தருளுந்தூயசோதியைவெண்ணெய்
நல்லூரி
லற்புதப்பழவாவணங்காட்டியடியனாவென்னையாளதுகொண்ட
நற்பதத்தைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்
னினைக்கேனே. 9

எங்கேனுமிருந்துன்னடியேனுனைநினைந்தா
லங்கேவந்தென்னொடுமுடனாகிநின்றருளி
யிங்கேயென்வினையையறுத்திட்டெனையாளுங்
கங்காநாயகனேகழிப்பாலைமேயானே. 10

உரைப்பாருரையுகந்துள்கவல்லார்தங்களுச்சியா
யரைக்காடரவாவாதியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே 11

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே 12

சுந்தரமூர்த்திகள்.

---

## XIII. திருமாலை

பச்சைமாமலைபோல்மேனிபவளவாய்கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம்கொழுந்தேஎன்னும்
இச்சுவைதவிரயான்போய்இந்திரலோகமாளும்
அச்சுவைபெறினும்வேண்டேன் அரங்கமாநகருளானே. 1

மெய்யர்க்கேமெய்யனாகும்விதியிலாவென்னைப்போல
பொய்யர்க்கேபொய்யனாகும்புட்கொடியுடையகோமான்
உய்யப்போமுணர்வினார்கட்குஒருவனென்றுணர்ந்தபினனை
ஐயப்பாடறுத்துத்தோன்றும்அழகனூராரங்கமன்றே. 2

விரும்பிநின்றேத்தமாட்டேன்விதியிலேன்மதியொன்றில்லை
இரும்புபோல்வலியநெஞ்சம்இறையிறையுருகும்வண்ணம்
சுரும்பமர்சோலைசூழ்ந்த அரங்கமாகோயில்கொண்ட
கரும்பினைக்கண்டுகொண்டுஎன்கண்ணிணைகளிக்குமாறே. 3

குடதிசைமுடியைவைத்துக்குணதிசைபாதம்நீட்டி
வடதிசைபின்புகாட்டிதென்திசையிலங்கைநோக்கி
கடல்நிறக்கடவுளெந்தை அரவணைத்துயிலுமாகண்டு
உடலெனக்குருகுமாலோஎன்செய்கேன்உலகத்திரே. 4

ஊரிலேன்காணியில்லைஉறவுமற்றொருவரில்லை
பாரில்நின்பாதமூலம்பற்றிலேன்பரமமூர்த்தி
காரொளிவண்ணனேகண்ணனேகதறுகின்றேன்
ஆருளர்களைகணம்மா அரங்கமாநகருளானே 5

ஆர்த்துவண்டலம்புஞ்சோலைஅணிதிருவரங்கந்தன்னுள்
கார்த்திரளனையமேனிக்கண்ணனேஉன்னைக்காணும்
மார்க்கமொன்றறியாமனிசரில்துரிசனாய
மூர்க்கனேன்வந்துநின்றேன்மூர்க்கனேன்மூர்க்கனேனே. 6

தொண்டரடிப்பொடியாழ்வார்.

## XIV. தேவாரம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாள்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 1

நின்னடியேவழிபடுவானிமலாநினைக்கருத
வென்னடியானுயிரைவவ்வேலென்றடற்கூற்றுதைத்த
பொன்னடியேபரவிநாளும்பூவொடுநீர்சுமக்கு
நின்னடியாரிடர்களையாய்நெடுங்களமேயவனே 2

குழலினோசைவீணைமொந்தைகொட்டமுழவதிரக்
கழலினோசையார்க்கவாடுங்கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங்கடலிலோதந்தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. 3

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. 4

நன்றுடையானைத்தீயதில்லானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாததிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிரும்மே. 5

எண்ணார்முத்தமீன்றுமரகதம்போற்காய்த்துக்
கண்ணார்கீழுகுபவளம்பழுக்குங்கலிக்காழிப்
பெண்ணோர்பாகாபித்தாபிரானேயென்போர்க்கு
நண்ணாவினைகணொடாறுமின்பநணுகும்மே. 6

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி
யலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்
வலம்வந்தமடவார்கணடமாடமுழவதிரமழையென்றஞ்சிச்
சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே. 7

தந்தையார்போயினார்தாயரும்போயினார்தாமும்போவார்
கொந்தவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டு
போவா
ரெந்தநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்சே
யந்தணாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. 8

கோங்கமேகுரவமேகொன்றையம்பாதிரி
மூங்கில்வந்தணைதருமுகலியின்கரையினி
லாங்கமர்காளத்தியடிகளையடிதொழ
வீங்குவெந்துயர்கெடும்வீடெளிதாகுமே. 9

கோழைமிடறாககவிகோளுமிலவாகவிசைகூடும்வகையா
லேழையடியாரவர்கள்யாவைசொனசொன்மகிழுமீசனிடமாந்
தாழையிளநீர்முதியகாய்கமுகின்வீழநிரைதாறுசிதறி
வாழையுதிர்வீழ்கனிகளூறிவயல்சேறுசெயும்வைகாவிலே. 10

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயவதுமிதுவே. 11

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங்கோபுரஞ்சூழ்மணிக்
கோயின்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 12

திருஞானசம்பந்தர்.

---

## XV. தேவாரம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. 1

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவுந்
திண்ணன்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. 2

சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
உலந்தவணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே. 3

மெய்ம்மையாமுழவைச்செய்துவிருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாங்களையைவாங்கிப்பொறையெனுநீரைப்பாய்ச்சித்
தம்மையுநோக்கிக்கண்டுதகவெனும்வேலியிட்டுச்
செம்மையுணிற்பாராகிற்சிவகதிவிளையுமன்றே. 4

பற்றாய்நினைந்திடப்போதுநெஞ்சேயிந்தப்பாரைமுற்றுஞ்
சுற்றாயலைகடன்மூடினுங்கண்டேன்புகல்நமக்கு
உற்றானுமையவட்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்
முற்றாமூளைமதிக்கண்ணியினான்றன்மொய்கழலே. 5

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. 6

தொழுதுதூமலர்தூவித்துதித்துநின்
றழுதுகாமுற்றரற்றுகின்றாரையும்
பொழுதுபோக்கிப்புறக்கணிப்பாரையு
மெழுதுங்கீழ்க்கணக்கின்னம்பரீசனே. 7

அரிச்சிராப்பகலைவராலாட்டுண்டு
சுரிச்சிராதுநெஞ்சேயொன்றுசொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை
நரிச்சிராதுநடக்குநடக்குமே, 8

மனிதர்காளிங்கேவம்மொன்றுசொல்லுகேன்
கனிதந்தாற்கனியுண்ணவும்வல்லீரே
புனிதன்பொற்கழலீசனெனுங்கனி
யினிதுசாலவுமேசற்றவர்கட்கே. 9

கங்கையாடிலென்காவிரியாடிலென்
கொங்குதண்குமரித்துறையாடிலென்
ஓங்குமாகடலோதநீராடிலென்
எங்குமீசனெனாதவர்க்கில்லையே. 10

திருவேயென்செல்வமேதேனேவானோர்செழுஞ்சுடரேசெழுஞ்
சுடர்நற்சோதிமிக்க
வுருவேயென்னுறவேயென்னூனேயூனினுள்ளமேயுள்ளத்தி
னுள்ளேநின்ற,
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்கருமணியேமணியாடு
பாவாய்காவா
யருவாயவல்வினைநோயடையாவண்ணமாவடுதண்டுறையுறை
யுமமரரேறே. 11

கருவுற்றநாண்முதலாகவுன்பாதமேகாண்பதற்கு
உருகிற்றெனுள்ளமுநானுங்கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
றிருவொற்றியூராய்திருவாலவாயாய்திருவாரூராய்
ஒருபற்றிலாமையுங்கண்டிரங்காய்கச்சியேகம்பனே. 12

திருநாவுக்கரசர்.

## XVI. திருக்குறள்.

கற்றதனாலாயபயனென்கொல்வாலறிவன்
நற்றாடொழாஅரெனின். 1

இனியவுளவாகவின்னாதகூறல்
கனியிருப்பக்காய்கவர்ந்தற்று. 2

நன்றிமறப்பதுநன்றன்றுநன்றல்ல
தன்றேமறப்பதுநன்று. 3

யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. 4

பொய்யாமைபொய்யாமையாற்றினறம்பிற
செய்யாமைசெய்யாமைநன்று 5

கற்ககசடறக்கற்பவைகற்றபின்
நிற்கவதற்குத்தக. 6

அறிவுடையாரெல்லாமுடையாரறிவிலார்
என்னுடையரேனுமிலர். 7

சொலல்வல்லன்சோர்விலனஞ்சானவனை
இகல்வெல்லல்யார்க்குமரிது. 8

மருந்தெனவேண்டாவாம்யாக்கைக்கருந்திய
தற்றதுபோற்றியுணின். 9

அற்றாலளவறிந்துண்கவஃதுடம்பு
பெற்றானெடிதுய்க்குமாறு. 10

திருவள்ளுவர்.

---

## XVII. திருவேரகம்.

இருமூன்றெய்தியவியல்பினின்வழாஅ
திருவர்ச்சுட்டியபல்வேறுதொல்குடி-
யறுநான்கிரட்டியிளமைநல்லியாண்
டாறினிற்கழிப்பியவறனவில்கொள்கை
மூன்றுவகைக்குறித்தமுத்தீச்செல்வத்
திருபிறப்பாளர்பொழுதறிந்துநுவல
வொன்பதுகொண்டமூன்றுபுரிநுண்ஞாண்
புலராக்காழகம்புலரவுடீஇ
யுச்சிக்கூப்பியகையினர்தற்புகழ்ந்
தாறெழுத்தடக்கியவருமறைக்கேள்வி
நாவியன்மருங்கினவிலப்பாடி
விரையுறுநறுமலரேந்திப்பெரிதுவந்
தேரகத்துறைதலுமுரியனதாஅன்று.

நக்கீரர்.

O-17MS1,S N22

٧٣/٩-٢١